31st October 1962]

(b) if so, the details thereof; and

(c) the law under which the Police took powers to seize such notes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Currency notes with the Dravida Munnetra Kazhagam emblem and slogans stamped on them, were found in circulation in Madras. No notes were seized by the Police.

(b) & (c) Do not arise.

Sir, I may add that a reference was made to the Currency Officer of the Reserve Bank of India at Madras in this connection, by the Police and the Reserve Bank has drawn the attention of the Commissioner of Police to the following Press Note issued by the Government of India :

'The attention of the public is drawn to the provisions of the Legal Tender (Inscribed Notes) Ordinance, 1942, under which currency and Bank notes bears writings intended to convey, or capable of conveying a message of a political character, cease to be legal tender, and the Reserve Bank of India is not under any obligation to receive or to refund the value of such Notes or to issue coins/currency notes/Bank notes, in exchange therefor. The public are, therefore, hereby warned not to use Currency and Bank notes as vehicles for publicising any slogan. They should also refuse to accept notes so defaced in order to avoid being involved in financial loss '.

The attention of the public was drawn to this Press Note.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் படித்த உத்தரவானது 1942-ம் வருஷம் நாட்டில் விடுதலை இயக்கம் சம்பந்தமான கோஷங்கள் பிறப்பிக்கப்பட்ட காலத்தில், அதை ஒடுக்குவதற்காக அன்றிருந்த அன்னிய ஆட்சி பிறப்பித்த உத்தரவாகும். இப்பொழுது அதே மாதிரி நிலையிலா கரன்ஸி நோட்டில் வந்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதே நிலைதான் இன்றைக்கும். ஆனால், அன்னிய ஆட்சியைத் தள்ளிவிடவேண்டும் என்பதற்காக அல்ல. நான் மேலே குறிப்பிட்ட உத்தரவு இன்றைக்கும் அமுலில் இருக்கிறது என்பதற்காகத்தான், உப கேள்வி யாரும் கேட்காவிட்டாலும் நான் அதைப் படித்தேன். அந்த உத்தரவு இப்பொழுதும் அமுலில் இருக்கிறது.

Poramboke Lands

* 1010-G *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state :

(a) whether the Government propose to give pattas to the ryots cultivating poromboke lands for more than ten years and paying penal assessment : and

(b) if so, the details thereof?

[31st October 1962

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பல ஆண்டுகளாகப் புறம் போக்கு நிலங்களைச் சாகுபடி செய்து வந்த விவசாயிகள், அந்த நிலங்களைத் தங்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு ஜமாபந்தியின் போதும் விண்ணப்பம் போட்டிருந்தும், அதற்கு எவ்வித பதிலும் அரசாங்கத்திலிருந்து கிடைக்கவில்லை. ஆகையால், இனிமேலாவது தகுந்த பதில் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : நிலமில்லாத ஏழைகள் விண்ணப்பம் போட்டால், அதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு வேண்டிய நிலத்தை அரசாங்கம் கொடுக்கும்.

போலீஸ்காரர் குழந்தைகள் கல்வி

*1010-எச். கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் நிதி அமைச்சர் செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) போலீஸ் படையினரின் குழந்தைகளின் கல்வி உதவிக்காக போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தனிப்பட்டவர்களிடமிருந்து பண நன்கொடை பெறப்பட்டதா ?

(இ) ஆமெனின், எவ்வளவு பணம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) Lump sum contributions received—Rs. 1,22,001.

Annual donations offered by certain persons and institutions—Rs. 16,400.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : போலீஸ்காரர்களுடைய குழந்தைகளின் நலனுக்காக இப்படிக் கேட்கின்றபோது சில தனிப்பட்ட நபர்கள் பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தது உண்மையா ? அப்படி அதிகப்படியான தொகைகள் கொடுக்கும் காரணத்தால், அப்படிப்பட்ட நபர்களுக்கு மதுவிலக்குச் சட்டத்தினின்றும் சில சலுகைகள் காட்டப்படுகின்றன என்று கூறுவது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீசாரிடத்தில் கனம் அங்கத்தினருக்கும்கூட அக்கறை இருக்கிறது. போலீசார்களையும்தான் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. பெரியவர்கள், சிறியவர்கள் எல்லோருக்கும் தான் போலீசார் சீரிய சேவை புரிகின்றார்கள். ஆகவே போலீசாருடைய குடும்பங்களையும் பாதுகாக்கவேண்டிய அக்கறை

லோருக்கும்தான் போலீசார் சீரிய சேவை புரிகின்றார்கள். ஆகவே

கொடையை அவர்களாக அளிக்கின்றார்கள். இதற்கு 'மோடிவ்' கற்பித்து, அவர்களுக்குச் சில சலுகைகளைப் போலீசார் காட்டுகிறார்கள் என்று சொல்வது முற்றிலும் தவறானது, அநீதியானது ;